முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.

O.S.241/2022
Dated 03.04.2025
பெயர் : சிவகாமசுந்தரி (வாசா .1.)
சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எங்களுடைய சொத்துக்களை சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களிடமிருந்து குத்தகை நெல் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாவாவில் தெரிவித்துள்ள சொத்துக்கள் எனது மாமனார் பட்டுசாமிக்கு பூர்வீக சொந்தமான சொத்துக்கள். எனது மாமனார் பூர்வீக சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தினைக் கொண்டு பட்டுசாமி தனது பெயரில் மேலும் சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வழக்குரையில் எந்த எந்த சொத்துக்கள், யார் யார் வசம் உள்ளது என்ற விபரத்தினை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் அவ்வாறு வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் பட்டுசாமி உயிருடன் இருக்கும்போது 2ம் பிரதிவாதி நாகநாதனிடம் சில சொத்துக்களை அடமானம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் அடமானம் எதுவும் வைக்கவில்லை.

01.05.2022 தேதியில் நாகநாதன் தாவா B பட்டியல் சொத்துக்களில் 28 செண்ட்டில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். 01.05.2022 தேதிக்கு முன்பாகவே தாவாவில் கண்ட 28 செண்டினை நாகநாதனிடம் தொகைப் பெற்றுக்கொண்டு எனது மாமனார் மற்றும் 1ம் பிரதிவாதியும் எனது கணவர் தமிழரசனும் ஊர் பொதுவில் அடமானம் வைத்து பணம் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றால் சரியல்ல. எனது மாமனார் இறப்பதற்கு சில காலம் முன்பாக புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. எனது மாமனார் வயது மூப்பின் காரணமாக நிதானம் இல்லாமல் சில காலம் இருந்தார் என்றால் சரியல்ல.

பூர்வீக சொத்துக்களில் பாகபிரிவினை ஏற்பட்டது சம்பந்தமாக தெரியுமா என்றால் தெரியும். எனது மாமனாருக்கு நான்கு மகன்கள். நான்கு மகன்களுக்கும் தலா ஒரு ஏக்கர் நிலமும், குடியிருக்க

மனைக்கட்டும் கொடுத்துள்ளார். பாகப்பிரிவினை சம்பந்தமாக எழுத்து பூர்வமான பத்திரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். அதனை அசல் வழக்கில் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கு ஏதேனும் முக்கிய காரணம் உள்ளதா என்றால் இல்லை. அந்த பாகப்பிரிவினை ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது. அந்த ஆவணங்கள் எனது கணவருக்கு 12 வயது ஆக இருக்கும்போது ஏற்பட்டது.

2ம் பிரதிவாதி நாகநாதன் எனது மாமனாருக்கு என்ன உறவு என்றால் இளைய சகோதரர் மகன் ஆவார். தாவா சொத்துக்கள் எல்லாம் ஒரே இடத்தில் உள்ளதா என்றால் துண்டு, துண்டாக உள்ளது. தாவா Bபட்டியல் சொத்துக்கள் இந்த வழக்கிற்கு முன்பாக நானோ, எனது மாமனார் பட்டுசாமியோ அனுபவித்து வந்ததற்கான ஆதாரங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நிலங்கள் அனைத்தும் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் சாகுபடி செய்தவர் பெயர் மற்றும் விபரங்கள் அனைத்தும் அந்த அந்த வருவாய் துறை கணக்குகளில் அந்த பசலி அடங்கலில் பதியப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

இந்த வழக்கிற்கு முன்பாக நானோ, எனது மாமனாரோ தாவா B பட்டியல் சொத்தில் விவசாயம் செய்ததற்கான அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லுவதுபோல் 01.05.2022ல் தாவா B பட்டியல் சொத்துக்களை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து விட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளேன். அவ்வாறு புகார் கொடுத்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டுசாமி படையாண்டவர், பாவாடைசாமி படையாண்டவர் இருவரும் சகோரர்கள் ஆவார்கள்.

தாவா 9 அயிட்ட சொத்து எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது மாமனார் பட்டுசாமி எப்போது இறந்துபோனார் என்றால் 25.05.2021ல் இறந்துவிட்டார். அவரது இறப்பு சான்றிதழினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது எனக்கு சொந்தம். எனது மாமனார் எழுதிவைத்த உயில்படி எனக்கு கிடைக்கப்பெற்றது. இந்த உயிலை

கணேசன் என்பவர் என்னிடம் கொடுத்தார். அவர் ஆதமங்களம் கிராமத்தை சேர்ந்தவர். தாவா A. பட்டியல் மற்றும் B பட்டியல் சொத்துக்கள் எனது மாமனாருக்கு தனிப்பட்ட உரிமை ஏதும் கிடையாது என்றாலும், அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாகவும், பூர்வீக சொத்துக்களிலிருந்து பெற்ற வருமானத்தில் பெறப்பட்ட சொத்துக்கள் என்பதாலும் கூட்டுக்குடும்ப சொத்து என்பதாலும், அவருக்கு எந்த உயிலும் முழுசொத்துக்கள் பொறுத்து ஏற்படுத்திவைக்க உரிமை இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

தாவா B பட்டியல் சொத்துக்கள் எனது மாமனார் இறப்பதற்கு முன்பும், அதன் பிறகும் எங்கள் குடும்பத்தின் வசத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் எத்தனை உயில் எழுதிவைத்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது மாமனார் எங்கள் குடும்பத்தில் வேறு ஏதேனும் உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் நிச்சயமாக இல்லை. எனது மாமனார் இறப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக அவர் புத்தி சுவாதீனம் இன்றி இருந்தார் என்றால் சரியல்ல. எனது மாமியார் பெயர் மனோன்மணி. அவர் தற்போது உயிருடன் தான் உள்ளார். அவர் எங்களது வீட்டில் தான் உள்ளார். எனது மாமியார் எனது வீட்டில் இல்லை என்றாலும் அவர் தனித்து வசித்து வருகிறார் என்றாலும் சரிதான். எனது மாமனாருக்கு எங்களது சுவாதீனத்தில் உள்ள புல எண் 255ல் தான் வீடு கட்டிக்கொடுத்து அதில் தனியாகத்தான் வசித்து வருகிறார்.

நான் சொல்லுவதின் உண்மைத்தன்மை அவரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். அவரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கலாம். எனது மாமனார் இறக்கும்போது அவருக்கு என்ன வயது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள உயில் எழுதும்போது எனது மாமனாருக்கு வயது என்ன என்றால் 85 வயது என உயிலில் கண்டுள்ளார். நான் தாக்கல்செய்துள்ள உயில் ஆவணம் எனது மாமனாரால் எழுதப்பட்டது அல்ல என்றாலும், உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் அவர் நல்ல ஆரோக்கியத்துடனோ, புத்திசுவாதீனத்துடனோ இல்லை என்றாலும் சரியல்ல. வாசாஆ4 ஆன உயில் நானும், எனது கணவர் தமிழரசனும், ஆதமங்களம் கணேசன் என்பவரும் வஞ்சக்கூட்டாக சேர்ந்துகொண்டு தயார் செய்த உயில் என்றால் சரியல்ல.

அந்த உயிலின் அடிப்படையில் எனக்கு தாவா சொத்துக்களில்

கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது மாமனார், எனது கணவர் தமிழரசன், அவருடைய சகோதரர் தியாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் ஊர் பொதுவில் வைத்து 2015ஆம் ஆண்டில் ரூ. 4 லட்சம் ரொக்கமாக பெற்றுக்கொண்டு தாவா B பட்டியல் சொத்துக்களில் ஒரு பகுதியை அடமானமாக வைத்துள்ளனர். அதன் அடிப்படையில் தான் அவர் அதனை அனுபவித்து வருகிறார். அந்த பணத்தினை கொடுக்காமல் ஏமாற்றும் நோக்கில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கானது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்பதால் இந்த வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.